# பிரதான விடயங்களடங்கிய ஆவணம் (KFD)
## தங்கக் கடன்
## மேர்சன்ட் பேங்க் ஒப் ஸ்ரீ லங்கா அன்ட் பினான்ஸ் பீஎல்சீ

| உற்பத்தி | பிரதான அம்சங்களும் நன்மைகளும் | வட்டி வீதங்கள் மற்றும் பிற கட்டணங்கள் | பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் | பிரதான விதிமுறைகளும் நிபந்தனைகளும் | உற்பத்திகள் / சேவைகள் தொடர்பில் பொருந்தக்கூடிய சட்டரீதியான ஏற்பாடுகள் | முறைப்பாடுகளை கையாளும் நடைமுறைகள் |
|---|---|---|---|---|---|---|
| தங்கக் கடன்கள் | அ) ஒரு பவுணுக்கான (8 கிராம்) ஆகக்கூடிய கடன் தொகை.<br>18K – 24K தங்கம்.<br>ஆ) போட்டித்தன்மைமிக்க குறைந்த வட்டி வீதம்.<br>இ) எந்தவொரு MBSL கிளைகளிலும் கொடுப்பனவு செய்யலாம்.<br>ஈ) சிறியளவிலான கடன் விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்படும்.<br>உ) ஒப்பிட முடியாத, துரிதமான, கண்ணியமான சேவை.<br>ஊ) தனிப்பட்டதன்மையும் இரகசியமும் பாதுகாக்கப்படும்.<br>எ) முன்னறிவித்தலின்றியும் சிக்கல்களின்றியும் மீட்டுக் கொள்ளலாம்.<br>ஏ) அடகு வைக்கப்பட்டுள்ள பொருட்களுக்கு இலவச காப்புறுதி.<br>ஐ) வேறு நபர்கள் மூலமாக கொடுப்பனவு செய்யக்கூடிய வசதி.<br>ஒ) ஒன்றுக்கு மேற்பட்டதாக அடகு வைக்கப்பட்டுள்ள நகைகளுள் ஏனும் ஒரு நகையைத் திருப்பக்கூடிய வசதி. | அ) உரிய வட்டி வீதங்கள் நாடு முழுவதும் அமைந்துள்ள கிளைகளில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. சந்தை நிலைமைகளின் அடிப்படையில் எமது வட்டி வீதங்கள் காலத்திற்குக் காலம் மாற்றியமைக்கப்படும்.<br><br>ஆ) நகைகள் புதுப்பிக்கப்படும்போதும், பகுதிக் கொடுப்பனவின்போதும், பகுதியளவில் மீட்டுக் கொள்ளும்போதும், திரட்டிய வட்டி வசூலிக்கப்படும்.<br><br>இ) நகை அடகு வைக்கப்பட்ட திகதி உள்ளடங்கலாகவும், மீட்கும் திகதி உள்ளடக்கப்படாததாகவும், அடகு வைக்கப்பட்ட மொத்த நாட்களின் எண்ணிக்கைக்கு வட்டி கணக்கிடப்படும்.<br><br>ஈ) தங்கக் கடனுக்கான ஒப்பந்தம் முதிர்ச்சியடைந்துள்ள சந்தர்ப்பத்தில் 0.5% வீதம் மாதாந்த தண்டப்பணம் அறவிடப்படும்.<br><br>உ) மறைமுக கட்டணங்கள் இல்லை. | அ) வாடிக்கையாளர் தமது சொந்த நகைகளுடன், தமக்கு அண்மையில் அமைந்துள்ள எமது கிளைக்குச் சென்று அடகு பிடிக்கும் உத்தியோகத்தருடன் தமது தேவைகளை கலந்துரையாட முடியும்.<br><br>ஆ) நகை அடகு பிடிக்கும் உத்தியோகத்தர் தங்க நகையை மதிப்பீடு செய்ததன் பின்னர் வாடிக்கையாளரின் தேவைக்கேற்ப முற்பணத்தை வழங்குவார்.<br><br>இ) தங்க நகைக்கான கடன் தொகை மற்றும் ஏனைய நிபந்தனைகள், விதிமுறைகளை வாடிக்கையாளர் ஏற்றுக் கொண்டால், கம்பனியானது கடன் தொகையை வழங்கும்.<br><br>**தேவையான ஆவணங்கள்**<br>அ) செல்லுபடியான அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணம் ( தேசிய அடையாள அட்டை / செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு) | **தகைமை**<br>அ) தங்க நகையை உடைமையாகக் கொண்டிருக்கும் 18 வயதிற்கு மேற்பட்ட இலங்கைப் பிரஜை ஒருவர். (18 – 24 கரட்)<br><br>ஆ) ஒப்பந்தம் செய்யப்பட்டு மீட்கப்படாத தங்க நகைகள் தொடர்பில் எழுத்து மூலமான முன்னறிவித்தலை வாடிக்கையாளருக்கு வழங்கியதன் பின்னர், அவை ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.<br><br>இ) அடகு வைக்கப்பட்ட எந்தவொரு நகையும் காணாமல்போயுள்ளபோது அல்லது சேதமடைந்துள்ளபோது அச்சந்தர்ப்பத்தில் உள்ள நகையினது மதிப்பீட்டை கம்பனி செலுத்தும். | அடகுச் சட்டங்கள் மற்றும் அடகுத் தரகர்கள் சட்டம் | எமது உற்பத்திகள் மற்றும் சேவைகள் தொடர்பில் வாடிக்கையாளர்கள் முறைப்பாடுகளை முன்வைக்கலாம்.<br><br>உரிய கிளையிலுள்ள முகாமையாளரை தொடர்பு கொள்ளுதல் அல்லது வாடிக்கையாளர்களது முறைப்பாடுகளை கையாளும் பின்வரும் உத்தியோகத்தருக்கு சமர்ப்பித்தல்:<br>பிரதிப் பொது முகாமையாளர் மற்றும் உற்பத்தி அபிவிருத்தி, மேர்சன்ட் பேங்க் ஒப் ஸ்ரீ லங்கா அன்ட் பினான்ஸ் பீஎல்சீ, இலங்கை வங்கி வர்த்தக கோபுரம், இல.28.புனித மைக்கல் வீதி, கொழும்பு 03,<br>பொதுத் தொலைபேசி 0114 711 711. |

"சந்தேகத்திற்கிடமான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் வரம்புக்கு மேலான கொடுக்கல் வாங்கல்கள் (1 மில்லியனுக்கு மேல்) நிதிப் புலனாய்வுப் பிரிவிற்கு அறிக்கையிடப்படும்."